# மனித உரிமை பேரவை ஆணையரின் குற்றச்சாட்டை அமெரிக்க பிரேரணை கவனத்தில் எடுக்கவில்லை



## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த இலங்கை நீதித்துறை மீதான குறைபாடுகளை அமெரிக்க பிரேரணை கவனத்தில் எடுக்கத் தவறிவிட்டதென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஐ.நா. வின் 30 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை போர்க்குற்ற விசாரணை தொடரில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட விசாரணையானது மட்டுப்படுத்தப்பட்ட காலப் பகுதியை மட்டும் விசாரித்திருந்த போதிலும் இதுவரை காலத்தில் வந்துள்ள அறிக்கைகளுள் இலங்கையில் பாரியளவில் இழைக்கப்பட்ட மிகக் கொடூரமான குற்றங்கள் பற்றிய தகவல்களை பரந்தளவில் சேகரித்துள்ள ஒரு அறிக்கை என்கிற வகையில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை மீதான விசாரணை அறிக்கையை எமது அமைப்பு வரவேற்கிறது.

அத்தோடு இந்த ஆராய்வு நடவடிக்கையானது கடந்த மற்றும் தற்போதைய இலங்கை அரசுகளின் ஒத்துழைப்பின்மையால் இலங்கைக்குள் சென்று சாட்சிகளையோ அல்லது தடயங்களையோ நேரடியாக கண்டு கொள்ள முடியாத மிகவும் இறுக்கமான சூழமைவில் இடம்பெற்றது என்பதையும் நாம் அக்கறையுடன் கருத்தில் கொள்கிறோம்.

அத்தோடு இலங்கையில் இழைக்கப்பட்ட சர்வதேச சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் மீது விரிவான குற்றவியல் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்த விசாரணையானது ஆகக் குறைந்தது போர் நடந்த முழுமையான காலப் பகுதியையாவது விசாரிக்க வேண்டும் என்றும் இவ்விசாரணை அறிக்கை பரிந்துரை செய்திருப்பதை நாம் வரவேற்கின்றோம்.

பல தசாப்த கால யுத்தம், அவசர கால நிலை மற்றும் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் சூழல் என்பவற்றால் இலங்கையின் நீதித்துறை மற்றும் பாதுகாப்புத் துறை சீரழிந்து போயுள்ளன என ஐ.நா. அறிக்கை குறிப்பிடுகிறது. இதன் காரணமாக இப்படியான ஒரு விசாரணைக்கு உள்ளக பொறிமுறை ஒருபோதும் போதுமானதாக இருக்காது என்பதை ஐ.நா. அறிக்கை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

ஆனால் நீதி விசாரணைப் பொறிமுறை ஒன்றிற்கான தகைமை இல்லை என்பதை விட அரசாங்கங்கள் மாறியிருக்கின்ற போதிலும் இலங்கை அரசுக்கு அப்படியான நீதி விசாரணைப் பொறிமுறை ஒன்றிற்கான அரசியல் விருப்பு இல்லை என்பதே முக்கியமானதாகும்.

இந்த அடிப்படையின் பிரகாரம் மேற்குறிப்பிட்டவாறு சிதைந்து உருக்குலைந்து போயுள்ள இலங்கையின் சட்டத்துறையானது பூரணமான ஒரு மீளுருவாக்கத்திற்கு உள்ளாக்கப்படும் வரையிலும் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய எந்தவொரு குற்றவியல் நீதி விசாரணைப் பொறிமுறையிலும் ஈடுபடுத்தப்படக்கூடாது அல்லது (அப்படி அவர்களது பிரசன்னம் இருக்க வேண்டுமெனில்) ஆகக் குறைந்த பட்சம் ஐ.நா. சபையினால் நிர்வகிக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படும் ஒரு குற்றவியல் நீதி வழங்கும் பொறிமுறையின் கீழாக ஒரு சிறிய பங்களிப்பை வழங்கலாம்.

ஆனால் கவலைக்குரிய விடயமாக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் (நேற்று) அமெரிக்க பிரேரணை வரைபானது (A/HRC/30129) ஒரு குற்றவியல் விசாரணை ஒன்றை நடைமுறைப் படுத்தக் கோரி நிற்கின்ற போதிலும் மனித உரிமை ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த இலங்கையின் நீதித்துறை மீதான குறைபாடுகளை கருத்தில் எடுக்கத் தவறியிருக்கிறது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரால் முற்றாகவே நிராகரிக்கப்பட்ட உள்நாட்டுப் பொறிமுறையொன்றாகவே நடைமுறையில் இருக்கப் போகின்ற இந்த செயற்றிட்டமானது நம்பகத் தன்மையானது என்கின்ற தோற்றப்பாட்டை வெளிப்படுத்துவதற்காக மட்டுமே வெறுமனே சில வெளிநாட்டு ஈடுபாட்டை இவ்வரைபு கோரி நிற்கின்றது.

நிறைவாக இலங்கையில் நியாயமான பொறுப்புக் கூறலும் நீதியும் முழுமையான சர்வதேச குற்றவியல் விசாரணை ஒன்றின் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும் என்பதே யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் பெருந்தொகையான தமிழர்களின் திடமான நம்பிக்கை என்பதை இங்கு வெளிப்படுத்துகிறேன்.